127

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப் பீடம்

விசேட தேவைகள்சார் கல்வித்துறை

சிறப்புக் கல்விமாணி (விசேட தேவைகள்சார் கல்வி) நிகழ்ச்சித் திட்டம் - 2020/2021

SNU 5341/ESU3141- கல்வி வழிகாட்டலும் ஆலோசனையும்

இறுதிப் பரீட்சை - 2021

பகுதி - I இன் அனைத்து வினாக்களுக்கும் பகுதி - II இல் ஏதாவது மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்குக.

காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : 08.08.2021 நேரம் : பி.ப 09.30 - ந.ப 12.30

## பகுதி I

1. ஆலோசனைக்கூறல் ஒரு சிகிச்சைசார் செயன்முறையாகும். உளவியல்சார் நடத்தைப் பிரச்சினைகளை அனுபவிக்கும் ஆலோசனை நாடிகளுக்கு பரிகாரம் அளிப்பதற்கு ஆலோசனைச் சேவையில் பயன்படுத்தப்படும் மூன்று (03) பிணி நீக்கல் நுட்பங்களை சுருக்கமாக விளக்குக.
2. விசேட தேவைகள் கொண்ட கட்டிளைஞர்கள் முகங்கொடுக்கும் ஆலோசனை சேவையினூடாக முகாமை அல்லது எதிர்கொள்வதற்கான தேவையுள்ள ஐந்து (05) பிரச்சினைகளை சுருக்கமாக விளக்குக.
3. ஓர் உதாரணத்தை முன்வைத்து தோல்வியடையும் வட்டம் (Circle of failure) என்பதை விளக்குக.
4. விசேட தேவைகள் கொண்ட பிள்ளைகளுக்காக ஒன்றிணைக்கப்பட்ட வழிகாட்டல் மற்றும் ஆலோசனைச் சேவை கட்டமைப்பினை பாடசாலைகள் கொண்டிருப்பதன் அனுகூலங்கள் மூன்றினை (03) பரிசீலனை செய்க.
5. விசேட கல்வித் தேவைகள் கொண்ட பிள்ளைகளின் ஆசிரியர்கள் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைக்கூறல் பற்றிய அறிவு மற்றும் நடைமுறைகள் பற்றி அறிந்திருக்க வேண்டியதற்கான காரணங்கள் நான்கினை (04) எழுதுக.
6. விசேட தேவைகள் கொண்ட பிள்ளைகள் அனுபவ வாழ்க்கை அழுத்தம் (Life Stress) என்பதனால் நீங்கள் கருதுவது யாது? என பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.
7. பாடசாலை வழிகாட்டல் மற்றும் ஆலோசனை கூறல் நிலையங்கள் விசேட தேவைகள் கொண்ட பிள்ளைகளுக்காக தொழிலுக்கு நிலைமாற்றும் செயன்முறையினை ஒருங்கிணைக்கும் அலகாக எவ்வாறு செயற்பட முடியும் என விளக்குக.
8. இலங்கையில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவையை வழங்கும் மூன்று (03) ஒழுங்கமைப்புகளைக் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றினைப் பற்றி விளக்குக.

(8 x 5 = 40 புள்ளிகள்)

# பகுதி II

9. i. தனியாள் மையக் கோட்பாட்டின் அடிப்படைத் தத்துவம் என்ன?

(10 புள்ளிகள்)

ii. ஆலோசகருக்கும் ஆலோசனை நாடிக்கும் இடையிலான உறவு ஆலோசனைசார் பிணிநீக்கல் செயன்முறையில் மிகவும் முக்கியமானது. தனியாள் மையக் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு மேற்படி கூற்றினை நியாயப்படுத்துக.

(10 புள்ளிகள்)

10. வகுப்பறையில் பேசாத நடத்தைகளை வெளிக்காட்டும் பிள்ளைகள் காணப்படுகின்றார்கள். அத்தகைய குறிப்பான நடத்தைகளை வெளிக்காட்டும் ஒரு பிள்ளையின் நடத்தைக்கான பின்னணி காரணங்களை கண்டறியவுள்ளீர்கள் எனக் கொள்வோம்.

i. மேற்படி பிள்ளை பற்றி கற்பதற்காக நீங்கள் பயன்படுத்தும் ஆலோசனை நுட்பங்கள் யாவை?

(10 புள்ளிகள்)

ii. மேற்படி பிள்ளைகள் வெளிக்காட்டியதாக நீங்கள் குறிப்பிட்ட நடத்தைகளை இழிவளவாக்குவதற்கு நீங்கள் பயன்படுத்தக்கூடிய உபாயங்கள் யாவை?

(10 புள்ளிகள்)

11. பெரும்பாலான ஆசிரியர்கள் கற்றல் இயலாமைகள் மற்றும் கற்றல் இடர்பாடுகள் ஆகியவற்றை வேறுபடுத்தி அறிய முடியாமல் உள்ளனர்.

i. ஒரு ஆலோசகர் என்ற வகையில் கற்றல் இடர்பாடுகள் மற்றும் கற்றல் இயலாமைகளை அனுபவிக்கும் பிள்ளைகளுக்காக ஒரு தலையிட்டு நிகழ்ச்சித் திட்டமொன்றினை திட்டமிடவுள்ளீர்கள் என கருதுக.

(10 புள்ளிகள்)

குறித்த செயற்பாட்டை நீங்கள் எவ்வாறு திட்டமிடுவீர்கள் என விளக்குக.

ii. கற்றல் இடர்பாடுகள் மற்றும் கற்றல் இயலாமை என்பவற்றுக்கு இடையிலான வேறுபாடுகள் பற்றிய விழிப்புணர்வை ஆசிரியர்களிடத்தில் எவ்வாறு ஏற்படுத்துவீர்?

(10 புள்ளிகள்)

12. i. பொருத்தப்பாடு தொடர்பான பிரச்சினைகள் என்பதனால் நீங்கள் கருதுவது யாது?
(06 புள்ளிகள்)

ii. விசேட கல்வித் தேவைகள் கொண்ட பிள்ளைகள் சிலர் பொருத்தப்பாடு தொடர்பான பிரச்சினைகளையும் அனுபவிப்பர்.
விசேட கல்வித் தேவைகள் கொண்ட பிள்ளைகள் அனுபவிக்கும் பொருத்தப்பாடு தொடர்பான பிரச்சினைகளில் தாக்கம் பற்றி சுருக்கமாக விளக்குக.
(06 புள்ளிகள்)

iii.விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட பிள்ளைகள் அனுபவிக்கும் பொருத்தப்பாடு தொடர்பான பிரச்சினைகளை இழிவளவாக்குவதற்கு எடுக்கக்கூடிய பரிகார நடவடிக்கைகள் யாவை?
(08 புள்ளிகள்)

13. i. கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்களில் மீத்திறன் கொண்ட பிள்ளைகள் வெளிக்காட்டும் குணவியல்புகள் யாவை?

a) மொழியும் கற்றலும்
b) உள - இயக்க விருத்தியும் கற்றலும்
c) தனியாள் மற்றும் சமூக குணவியல்புகள்

(10 புள்ளிகள்)

ii. சாதாரண வகுப்பறைகளில் இருக்கும் மீத்திறன் மற்றும் கெட்டித்தனம் கொண்ட மாணவர்களுக்கு நீங்கள் எவ்வாறு உதவுவீர்கள்.
(10 புள்ளிகள்)

14. விசேட கல்வித் தேவைகள் கொண்ட பெரும்பாலான பிள்ளைகளுக்கு, அவர்கள் பாடசாலைகளில் இருந்து வேலை உலகிற்கு இடமாறுவதற்கு மேலதிக ஒத்துழைப்புகள் தேவைப்படுகின்றன.

i. தொழில் இடமாற்றத்திற்கு ஏன் மேலதிக ஒத்துழைப்புகள் தேவைப்படுகின்றன, என பொருத்தமானதொரு உதாரணத்துடன் விளக்குக.
(06 புள்ளிகள்)

ii. தொழில்சார் ஆலோசனை கூறலின் பிள்ளைகளைக் கணிப்பீடு செய்வதற்காக சில கணிப்பீட்டு குறிகாட்டிகளதும் நியமப்படுத்தப்பட்ட சோதனைகளும் காணப்படுகினறன. தொழில்சார் ஆலோசனைக் கூறலின் கணிப்பீட்டு இலக்குகள் மூன்றினை (03) குறிப்பிடுக.
(06 புள்ளிகள்)

iii. விசேட கல்வித் தேவைகள் கொண்ட பிள்ளைகளின் சுமூகமான தொழில்சார் நிலைமாற்றலுக்கு நீங்கள் எவ்வாறு வசதிப்படுத்துவீர்கள்.
(08 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*